**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 22*
# *உபத்திரவம் – 16*

## *அந்திகிறிஸ்து*

*பூமியில் ஏதும் நடப்பதற்கு முன்னால் பரலோகத்தில் எதோ நடைபெற்றது.*

***ஏசாயா** 14:12-15, 12 “அதிகாலையின் மகனாகிய
விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை
ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!
13 நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய
நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை
உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின்
பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், 14 நான் மேகங்களுக்கு
மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு
ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.
15 ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே
தள்ளுண்டுபோனாய்.*

*மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்களுடன் சாத்தான் பரலோகத்தில் இருந்து தள்ளப்பட்டான். அவனுடைய அகந்தையினால் அவன் விழுந்துபோனான். “நான்” (I will) என்ற சொற்றொடர் 5 முறை வருவதை நீங்கள் கவனிக்கலாம்.*

*மீண்டும், தேவன் ஆதாமையும் ஏவாளையும் படைத்த போது சாத்தான் அந்த மனுஷியை ஏமாற்றினான். அவ்வாறே மனித இனத்தின் வீழ்ச்சி நடைபெற்றது.*

*ஆனால் தேவன் **ஆதியாகமம் 3:15**, உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" என வாக்களித்துள்ளார்.*

*ஒரு பெண்ணிடமிருந்து விதை வரும். அந்த விதையானது சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். சாத்தானை அழிக்கிற ஒரு மனிதன் வருவான் என்று தேவன் கூறினார்.*

*இயேசு கிறிஸ்து தான் அந்த மனிதன் என்பதை சாத்தான் அறிந்திருந்தான். உலக சரித்திரத்திலும் மீட்பின் சரித்திரத்திலும் சாத்தான் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நிறுத்த முயன்றான். அவன் கடவுளின் மக்களையும் தேவனின் திட்டத்தையும் மற்றும் மேசியாவாகிய கிறிஸ்துவையும் அழிக்க முயற்சி செய்தான்.*

*முதலாவது சாத்தான் மனித வம்சத்தை கெடுக்க முயன்றான். அப்போது மனித இனத்தை கெடுப்பதற்காக விழுந்த தேவதூதர்களை மனுஷிகளுடன் உடலுறவு கொள்ளும்படி அனுப்பினான்.*

***ஆதியாகமம் 6:2**, தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.*

தேவன் ஜலப்பிரளயத்தை வரச்செய்து அந்த இனத்தை அழித்து நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் மட்டும் காப்பாற்றினார்.

ஆபிரகாம் எகிப்துக்கு சென்றபோது சாத்தான் மீண்டும் முயற்சி செய்தான். அவன் சாராவைப் பற்றி பொய்கூறியதால், பார்வோன் சாராவின் மீது கட்டுப்பாட்டை மீறக்கூடிய வாய்ப்பை உண்டுபண்ணினான்.

சாராளைத் தவிர்த்து ஆபிரகாம் ஆகார் மூலம் ஒரு மகனை உருவாக்கி அதன் மூலம் தேவனுடைய திட்டத்தை குலைக்க சாத்தான் முற்சித்தான்.

ஈசாக்கிடமிருந்து பெற்ற யாக்கோபின் ஆசீர்வாதத்தை ஏசா ஆதாயப்படுத்த முயற்சித்தபோதும் சாத்தான் தேவனின் திட்டத்தை ரத்து செய்ய முயற்சித்தான்.

சாத்தான் பார்வோனைக் கொண்டு இஸ்ரவேலரின் அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொல்ல முயற்சித்ததை யாத்திராகமம் 1ஆம் அதிகாரத்திலிருந்து நாம் காணலாம்.

எபிரேயர்கள் தொடர்ச்சியான சில அற்புதங்களை செய்து எகிப்தை விட்டு யாத்திராகமத்தில் வெளியேறியபோது பார்வோன் அவர்களை பெரிய படைவீரர்களை கொண்டு துரத்தினான். பார்வோனின் ஆயுதம் ஏந்திய வீரர்கள் அவர்களுக்கு சமீபமாக வந்தபோது யூதர்கள் பயப்பட துவங்கினர். ஏனெனில் அவர்கள் சிவந்த சமுத்திரம் முன்னும் படைவீரர்கள் பின்னுமாக சிக்கிக்கொண்டனர். மீண்டுமாய் சாத்தான் தோற்றுப்போனான்.

## யோராம் *(Jehoram)* தன்னுடைய சகோதரர்களை கொன்றுபோடுகிறார் - *2* நாளாகமம் *21*

*யூதாவின் ராஜாவாகிய யோராம் (Jehoram) அதிகாரத்திற்கு வந்ததும், அவர் தன் சகோதரர்களை அரச குடும்பத்திலுள்ள மற்றவர்களோடு கொன்று போட்டார். அவர் எட்டு வருட சுருக்கமான ஆட்சிக்கு பிறகு மிகவும் கொடூரமான முறையில் மரணமடைந்தார்.*

*என்னதான் யோராம் (Jehoram) தனிப்பட்ட முறையில் தீயவனாக இருந்தாலும் தேவன் அந்த தேசத்தை அழித்துப்போடவில்லை. தேவன் தாவீதின் வம்சமே எப்போதும் தொடரவேண்டும் என்று தாவீதுக்கு தான் செய்த நித்திய உடன்படிக்கையை நினைவில் கொண்டார்.*

*சாத்தான் மீண்டும் யோராமை கொண்டு தன்னுடைய சகோதரர்களை கொல்லும்படி செய்து அந்த வம்சாவழியை தடுக்க முயற்சித்தான். ஆனால் அந்த முழு மேசியாவின் வழியையும் அவன் அழிக்கவில்லை. தேவன் அங்கே இடைபட்டு யோராமை கொன்று அவன் மகன்களை உயிருடன் இருக்க அனுமதித்தார்.*

## அராபியர்கள் அகசியாவைத் *(Ahaziah)* தவிர மற்ற அனைவரையும் கொன்று குவித்தனர் - *2* நாளாகமம் *22*

*யோராம் ராஜாவின் மகன்களை கொன்று மேசியாவின் வம்சாவழியை முறிக்க சாத்தான் அரேபியர் குழுவை அனுப்பினான். அதில் இளையவனாகிய அகசியா (Ahaziah) மட்டுமே தப்பிப்பிழைத்தார். அவன் துன்மார்க்கனாக இருந்தான். அவன் மேற்கு ராஜ்யத்தின் அரசனான யெகூவின்*

*(Jehu)* படையோடு நடந்த யுத்தத்தில் இறந்துபோனான். ராஜாவின் ஊழியக்காரர்கள் எருசலேமில் அவனை அடக்கம் பண்ணினார்கள் (2 இராஜாக்கள் 9:28). யெகூ *(Jehu)* இரண்டு அரசர்களைக் கொன்றது மட்டுமல்லாமல், இஸ்ரவேல் மற்றும் யூதாவாகிய அரச குடும்பங்கள் இரண்டையும் நிர்மூலமாக்கினான் (2 நாளாகமம் 22:8; 2 இராஜாக்கள் 10:1-14). அகசியாவின் *(Ahaziah)* இளைய மகனான யோவாஸின் *(Joash)* உயிரை காப்பாற்றியதன் மூலம் சாத்தான் அந்த விதையின் வழியை அழிக்க தீட்டிய மற்றொரு முயற்சியை தேவன் தடுத்து பாதுகாத்தார்.

## அத்தாலியா *(Athaliah)* யோவாசைத் *(Joash)* தவிர மற்ற அனைவரையும் கொன்று போடுகிறாள் - 2 நாளாகமம் 22

யெகூ *(Jehu)* வடக்கே அதிகாரத்தில் இருந்தான். தாவீதின் வம்சத்தில் யோவாசை *(Joash)* தவிர ஆண்பிள்ளைகள் யாரும் உயிர் பிழைத்தவர் இல்லை.

அகசியாவின் *(Ahaziah)* துன்மார்க்கமான தாயான அத்தாலியா *(Athaliah)* அரியணையை எடுத்து, மேசியாவின் வம்சாவழியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அரச குடும்பத்தை சேர்ந்தவர்களை வேரறுக்க தொடங்கினாள்.

பின்னர் ஆகசியாவின் சகோதிரியான ஜெஹோசெபா *(Jehosheba)* தன் குழந்தையான மருமகனை ராணியிடமிருந்து மறைத்து ஆகாசின் *(Ahaziah's)* குமாரனான குழந்தை யோவாசை *(Joash)* காப்பாற்றினாள். அத்தாலியாவின் ஆறு ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வரும் வரைக்கும் அவர் பாதுகாப்பாக வைக்கப்பட்டார் (841-835 கி.பி.).

## ஆமானின் (Haman) முயற்சி – எஸ்தர் 3

மொர்தெகாய் *(Mordecai)* தான் பெர்சியா *(Persian)* ராஜா அகாஸ்வேருவின் *(Xerxes')* அரண்மனையிலுள்ள ஒரே யூதர். ராஜாவின் நம்பகமான இராணுவ தளபதியான ஆமானுக்கு *(Haman)* மொர்தெகாய் தன்னை வணங்காத காரணத்திற்காக அவனை கொல்ல விரும்பினான். தன்னை வணங்கும்படி கட்டளையிட்டபோது மொர்தெகாய் தான் யூதனாக இருப்பதால் அவரை வணங்கமுடியாது என்றான்.

ஆமானும் அவனுடைய மனைவியும் பண்டைய பெர்சியாவிலுள்ள எல்லா யூதர்களையும் கொல்ல ஒரு சதி செய்தனர். மொர்தெகாயையும் அந்த நகரத்தில் வாழ்ந்த அனைத்து யூதர்களையும் கொல்ல ராஜா அகாஸ்வேரு *(Xerxes')* ஒரு ஆணை பிறப்பிக்கும்படி ஆமான் அவரை நம்பவைக்க முயற்சித்தான்.

மொர்தெகாயை கொன்றாலே அனைத்து பிரச்சனைகளும் தீர்ந்திருக்கும். ஆனால் ஆமான் அனைத்து யூதர்களையும் கொல்ல முடிவு செய்தான். இந்த சதியை யூத குலத்தைச் சேர்ந்த எஸ்தர் ராணியே முறியடித்தாள். முதாலவாதாக மொர்தெகாயை தூக்கிலிடவேண்டி கட்டியெழுப்பப்பட்ட தூக்கு மேடையிலேயே ஆமான் தூக்கிலிடப்பட்டார். தேவன் முழு யூத தேசத்தை இடைபட்டு காப்பாற்ற எஸ்தரை பயன்படுத்தினார். இதன்மூலம் இயேசு வரும் மேசியா வம்சாவழியை பாதுகாத்தார்.

## யோசேப்பின் (Joseph's) பயம் - மத்தேயு 1

இரண்டாம் பாடத்தில் யூத திருமணத்தைப் பற்றி நாம் பார்த்தபோது, ஒருமுறை உங்கள் திருமணம் நிச்சயமான பிறகு உங்களுடைய வருங்கால மனைவியை உங்கள் மனைவி என்று அழைக்க வேண்டும். யோசேப்புக்கு மரியாளுடன் திருமணம் செய்ய நிச்சயமாகி இருந்தது.

நிச்சயிக்கப்பட்ட காலத்தின்போதோ அல்லது அதற்கு வெளியிலோ எந்தவொரு பாலியல் நடவடிக்கையிலும் ஈடுபட்டால் அதை விபச்சாரமாக கருதி அதற்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

பரிசுத்த ஆவியானவரால் மரியாள் கர்ப்பமானதைப் பற்றி யோசேப்பு கேள்விப்பட்டபோது அவர் தனிப்பட்ட முறையில், அவசரமாக மற்றும் அமைதியான முறையில் நிச்சயத்தை முறிக்க விரும்பினார். இதனால் இயேசுவுக்கு சட்டவிரோதமாக பிறந்த குழந்தை என்ற பெயர் கிடைத்திருக்கும்.

ஆகையால், யூத சட்டதிட்டத்தின் கண்ணோட்டத்தில் தன் குழந்தை மேசியாவாக தகுதியற்றதாகிருக்கும். காபிரியேல் (Gabriel) தேவதூதன் வருகை தந்து மேலும் பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பிணியாகிய மரியாளின் கதை நம்பமுடியாதது என சாத்தான் வெளிப்படையாக அவனை நம்ப வைத்தான். தேவன் இடைபட்டதால் மட்டுமே யோசேப்பு மரியாளின் வார்த்தையை நம்பினான். இதனால் இயேசுவுக்கு யூத சட்டத்தின்படி பூமிக்குரிய தகப்பனும் தாயும் கிடைத்தது. மீண்டும் சாத்தானின் சதி முறியடிக்கப்பட்டது.

## *ஏரோதின் (Herod's) முயற்சிகள் – மத்தேயு 2*

*ஏரோது ராஜா ஒரு பாதுகாப்பற்ற மனிதன். அவர் ஏதோமிலிருந்து வந்தவர், எப்போதும் யூத மக்களுக்கு எதிராக இருந்தார். அவர் சிம்மாசனத்தில் இருப்பதற்காக ரோமர்களுக்கு பெரும் பணத்தை கொடுத்திருந்தார்.*

*புதிதாக பிறந்த யூதர்களின் மன்னனுக்கு மரியாதை செலுத்துவதற்காக சாஸ்திரிகள் (Magi) அவரை சந்தித்தபோது, 2 வயதிற்குறப்பட்ட ஒவ்வொரு குழந்தையையும் கொல்ல அவர் விரும்பினார்.*

*சாஸ்திரிகளின் விஜயத்தினால் ஏரோதும், அவருடன் சேர்ந்து எருசலேம் முழுவதும் கலக்கமடைந்ததை பற்றி வேதவாக்கியம் விளக்குகிறது. மேசியா பிறக்கும் இடத்தை பற்றி வேதவாக்கியங்கள் என்ன சொல்கிறது என்பதை கண்டுபிடிக்க ஏரோது தன் பிரதான ஆசாரியர்களையும் வேத பாரகரையும் கலந்தாலோசித்தார். (மீகா 5:2) இயேசுவின் மாற்றாந்தந்தையாகிய யோசேப்பின் கனவில் எச்சரிக்கப்பட்டதால் பாதுகாப்புக்காக எகிப்திற்கு சென்றனர்.*

*நீண்ட காலமாக சாத்தான் தேவனுக்கு அவருடைய மக்களுக்கும் எதிராக செயல்பட்டு வருகிறான். சாத்தான் இதுவரை வென்றதில்லை, ஆனால் சாத்தான் எப்போதுமே தேவனையும்,தேவனுடைய மக்களையும் தேவனின் திட்டத்தையும் தாக்குகிறான். அவன் ஒவ்வொரு முறையையும் அதை மட்டும் செய்யவதற்காகவே முயற்சிக்கிறான். இன்றும் அவன் தன்னிடம் உள்ள அனைத்தையும் வைத்து பெரும்பாலும் ஊடுருவலை வைத்து சபையை தாக்குகிறான்.*

*ஏனென்றால் அவன் அதை ஒரு பயனுள்ள கருவி என கற்றுக் கொண்டான்.*

*அபோஸ்தலனாகிய யோவான் வரவிருக்கும் அந்திகிறிஸ்துவை பற்றி சபைக்கு எச்சரிக்கிறார் மேலும் பலர் அந்திகிறிஸ்துவை போல் வந்துள்ளனர்.*

*1* ***யோவான்*** *2:18, பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்.*

*பல அந்திகிறிஸ்துகள் இப்போது உள்ளனர். மேலும் வரும் நாட்களில் இதன் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகும். ஆனால் 'அந்திகிறிஸ்து' வந்து உபத்திரவ காலத்தின் 7 வருடங்கள் ஆட்சி செலுத்துவான்.*

*1* ***யோவான்*** *4:3, மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.*

*அதனால் நிறைய கள்ள தீர்க்கதரிசிகள் வருவார்கள். மேலும் 'கள்ள தீர்க்கதரிசிகள்' உபத்திரவ காலத்தில் தான் எழும்புவார்கள்.*

*1* ***யோவான்*** *2:22, இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்?*

பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.

*2* **யோவான்** *1:7, மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்.*

அந்திகிறிஸ்துவானவன் அவன் தான் அந்த மேசியா என கூறி மக்களை ஏமாற்றுவான்.

இப்பொது சாத்தான் எவ்வாறு திரும்ப வருவான் ன்பதை பற்றி நாம் காணலாம். அவன் எப்படிப்பட்ட விசேஷித்த குணத்துடன் வருவான் என்பதை குறித்து முதலில் நாம் காணலாம்.

### 1. திறமையான, திறமைவாய்ந்த / அறிவார்ந்த மேதை

**தானியேல்** *7:8, அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தினகொம்புகளில் மூன்றுபிடுங்கப்படடது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவகளைப் பேசும் வாயும் இருந்தது.*

மனிதர்கள் போலவே அவனுக்கும் கண்கள் இருக்கும். வேதாகமத்தில் கண்கள் என்பது அறிவாற்றலை பற்றி தீர்கதரிசனமாக விளக்குகிறது. சாத்தான் ஆதாம் மற்றும் ஏவாளிடம் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்று அவர்களுக்கு ஆசைகாட்டியதை நினைவில் கொள்ளுங்கள்.

## 2. பெரிய பேச்சாளர்

**தானியேல்** *7:20, அதின் தலைமேலுள்ள பத்துக்கொம்புகளைக்குறித்தும் தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்துபோக எழும்பினதுமாய், கண்களையும் பெருமையானவைகளைப் பேசும் வாயையுமுடையதுமாய், மற்றவைகளைப்பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக்குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன்.*

*அவன் அழகாக இருப்பான். மற்றவர்களை விட சிறந்த உடல்நிலை கொண்டிருப்பான். ஒரு சிறந்த பேச்சாளராகவும் இருப்பான்.*

## 3. பெரிய அரசியல்வாதி

**தானியேல்** *11:21, அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்; இவனுக்கு ராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்; ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து, இச்சகம் பேசி, ராஜ்யத்தைக் கட்டிக்கொள்வான்.*

*அவன் சமாதானமாக நுழைவான், ஆனால் ஒரு அரசியல்வாதி போலவே, மென்மையான வார்த்தைகளையும் தவறான வழிகளையும் பயன்படுத்துவான். அரசியல்வாதிகள் எப்படி ஒரு முற்றிலும் பொய்யான விஷயத்தை மென்மையான வார்த்தைகள் கொண்டு பேசுகிறார்கள் என்பதைப் பார்கிறோம். அவர்கள் சில விஷயங்களை தங்களால் செய்ய முடியாது என்று அறிந்திருந்தும் தங்களால் செய்ய முடியும் என்று வாக்குறுதி அளிக்கின்றனர்.*

*அவன் அம்புகள் இல்லாமல் வில்லை ஏந்தியவனாய் வருவான் என்று வெளி 6:2 கூறுகிறது. இது அவன் சமாதானத்துடனே வருவான் என்தை அறிவிக்கிறது.*

## *4. பெரிய தொழிலதிபர்*

***தானியேல் 8:25**, அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடிவரப்பண்ணி, தன் இருதயத்தில் பெருமைகொண்டு, நிர்விசாரத்தோடிருக்கிற அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்புவான், ஆனாலும் அவன் கையினாலல்ல வேறுவிதமாய் முறித்துப்போடப்படுவான்.*

*அவன் செழிப்பான ஒரு வியாபாரத்தை உருவாக்ககூடிய பெரும் புத்திசாலி. வணிக ரீதியாக அவன் பெரும் வளம் சேர்கக்கூடியவன்.*

*அந்திகிறிஸ்துவுடன் இருப்பவர்கள் மிகுந்த செல்வ செழிப்புடையவர்களாகி ஆடம்பரமாக வாழ்கின்றனர் என்று வெளி 18:3 கூறுகிறது.*

## *5. வல்லமையான இராணுவ சக்தி*

***தானியேல் 7:23**, அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது எல்லா ராஜ்யங்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும்.*

*அவன் பூமி முழுவதையும் அபகரித்துக்கொள்ளுவான். அவன் புத்திசாலித்தனமாக சக்தியை அடைவதற்காக சில தந்திரங்களை செய்வான். அதுமட்டுமல்லாமல் அவன் சக்தியின் தேவனை ஆராதனையும் செய்வான். வெளி 13:4.*

## *6.* மதத்தலைவர்

*அவனை ஆராதிக்குமாறு கேட்டுக்கொள்வதை தானியேலின் புத்தகத்தில் பல மேற்கோள்கள் இருப்பதை நாம் காணலாம். மேலும், அந்திகிறிஸ்து எப்படி இந்த முழு உலகமும் தன்னை ஆராதிக்கும்படியும் தன்னை தேவனுடைய ஆலயத்தில் நிறுவி தன்னை மட்டுமே ஒரே கடவுளாக வழிபட வேண்டும் என்று கோருவதை வெளி 17ஆம் அதிகாரம் காண்பிக்கிறது.*

## *7.* அவன் ஒரு ஓரினச்சேர்க்கையாளர்

**தானியேல்** *11:37, அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி,*

*நம் காலத்தில் ஓரினச்சேர்க்கை பற்றிய மனநிலை ஏன் இத்தகைய பெரிய சத்தத்தை செய்கிறதென்று நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன்.*

## *8.* தன்னையே தேவனாக ஆராதிக்கும்படி மக்களை பலவந்தப்படுத்துவான்.

*அந்திகிறிஸ்து தன்னையே வழிபட வேண்டும் என்று மக்களை பலவந்தப்படுத்துவான். மக்கள் தமது வலது கையில் 666 என்ற அடையாளச் சின்னத்தை இட வேண்டும் என்றும் கட்டாயப்படுத்துவான்.*

*2* **தெசலோனிக்கேயர்** *2:4, அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில்*

தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

**வெளி** *13:17-18,* [17]அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது. [18]இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

## 9. அவன் மறித்து உயிர்த்தெழுவான்

*அந்திகிறிஸ்துவானவன் உபத்திரவ காலத்தின் மத்தியிலேயே இறந்து விடுவான். அதற்கு பிறகு அவனுள் இருந்து சாத்தான் வந்து இந்த உலகத்தை 3 ½ ஆண்டுகளுக்கு ஆட்சி செய்வான்.*

**வெளி** *13:3-4,* [3]அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, [4]அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்."

**வெளி** *13:12-13,* [12]அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும்

*அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது. [13]அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து,*

*தேவானாகிய இயேசு கிறிஸ்து என்ன செய்தாரோ அதையே நகலாக்க அந்திகிறிஸ்துவானவன் எப்போதும் முயற்சி எடுப்பான். இங்கே மீண்டும் சாத்தான் அந்திகிறிஸ்துவின் உடலின் மூலமாய் நுழைகிறான்.*

*அந்திகிறிஸ்து சாவதற்கு எதுவாக காயமடைவான் என்று தேவன் தீர்க்கதரிசனமாய் உரைத்தார்.*

***சகரியா** 11:17, மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலதுகண்ணின்மேலும் வரும்; அவன் புயமுழுதும் சூம்பிப்போம்; அவன் வலதுகண் முற்றிலும் இருள் அடையும் என்றார்.*

*இரகசிய வருகையின் போது உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இதை கேட்பவர்களுக்காகவும் படிப்பவர்களுக்காகவும் நான் உண்மையாக ஜெபம் செய்கிறேன்.*

*நீங்கள் இதை படித்திருந்தும் அதை விட்டுவிட்டீர்கள் என்றால் அவன் தான் அந்திகிறிஸ்து என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்!!*

*தேசங்களின் காலங்களும், அந்திகிறிஸ்துவும் எப்படி அவர்கள் இணைந்திருப்பார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.*

இதற்கு முந்தய பாடத்தில் புறஜாதி தேசங்களின் காலத்திய பற்றி தேவனாகிய இயேசு என்ன கூறியுள்ளார் என்பதை லூக்கா 21இல் இருந்து நாம் பார்த்ததை நினைவில் கொள்ளுங்கள்.

**தானியேல்** *2:41-44,* [41]பாதங்களும் கால்விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆனாலும் களிமண் இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். [42]காால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால் அந்த ராஜ்யம் ஒருபங்கு உயரமும் ஒருபங்கு நெரிசலுமாயிருக்கும். [43]நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள். [44]அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையில்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெண்கலத்தையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

ரோம் என்பது கிழக்கு மற்றும் மேற்கு ரோமானிய பேரரசை உள்ளடக்கியது. நான்காவது இராஜ்யம் ரோமாகும். இறுதி

*கட்டமானது பத்து-கால்விரல்கள் கூட்டமைப்பாக இருக்கும். இது வெளிபடுத்தல் புத்தகத்தில் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*ஆனால் ரோம ராஜ்யத்தின் இறுதி வடிவத்திற்கான நாட்களில்* **தானியேல்** *7:7, "அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.*

**தானியேல்** *7:24, அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப்பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு,*

*அதனால் இந்த தீர்க்கதரிசனத்தில் இருந்து புத்துயிர் பெற்ற ரோம பேரரசுதான் மீண்டும் உயரும் என்பதை அறிந்துகொள்ளலாம்.*

*பிறகு அவர்களின் மூலமாய் அந்திகிறிஸ்து எழும்புவான்.*

*அவன் அந்த மூன்று ராஜாக்களை அடக்குவான். அதற்கு பின்னர் மற்ற ராஜாக்கள் அவனிடம் சரணாகதி அடைந்து விடுவார்கள்.*

*அவன் உலகம் முழுவதிலும் ஒரு அதிகாரத்தை உருவாக்கி உலகம் முழுவதையும் ஏமாற்றுவதன் மூலமாய் கைப்பற்றுவான்.*

*இந்த ஏழு-ஆண்டு கால உபத்திர காலத்தின் நடுவில் அவர்கள் தன்னை ஆராதிக்குமாறு கட்டாயப்படுத்தி வெறுக்கத்தக்கதான அழிவை (abomination desolation) நிறுவுவான்.*

*இதுவே தேசங்களின் வரலாற்றை பற்றியதான தேவனின் திட்டம்.*

*இப்போது, சாத்தான் என்ன செய்ய விரும்புவான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

*அந்த திட்டத்தை கலைப்பான்.*

*ஒரு ஐந்தாம் உலக ராஜ்யத்தை சேர்ப்பதே சாத்தானின் எண்ணமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அப்போது தான் தேவனின் வார்த்தை ஒழிந்து போகும்.*

*உலக வல்லரசாக ஹிட்லரின் எழுச்சி என்பது இயற்கையில் பேய் பிடித்ததொன்று இரண்டு மதச்சார்பற்ற புத்தகங்கள் ஹிட்லரின் உள்ளே உள்ள அதிகாரப் பிரிவுகளின் விவரங்களை நமக்காக கொடுக்கின்றன.*

- *மெயின் கம்ப் (Mein Kampf) – இருபதாம் நூற்றாண்டின் பழங்கதை (The Myth of the Twentieth Century)*
- *அந்தொனி ரீடின் (Anthony Read) சாத்தானின் சீஷர்கள்: ஹிட்லரின் உள் வட்டம் (The Devil's Disciples: Hitler's Inner Circle).*

- *‘மந்திரிப்பவர்களின் காலையை’ (‘The Morning of the Magicians’) எழுதிய லூயிஸ் பாவெல் (Louis Pauwels) மற்றும் ஜகுஸ் பெர்கியேர் (Jacques Bergier).*
- *காலியான பூமியை (The Hollow Earth) எழுதிய எரிக் நோர்மன் (Eric Norman)*

*இந்த ஆசிரியர்களிடமிருந்து நீங்கள் பெறும் முடிவான முடிவு இதுதான். இந்த நபர்களால் நடத்தப்படும் நேர்காணல் மற்றும் அனுபவங்களைப் பதிவு செய்த பிறகு எழுதப்பட்டது.*

*“ஹிட்லர் ஒரு சுயமாக கற்ற பைத்தியக்காரன், அவர் ஒருசில தற்புகழ்ச்சிகாரரர்களால் (megalomaniacs) சூழப்பெற்றும், டெக்கார்டேஸ் (Descartes) தத்துவவாதிகளை நிராகரித்தும், முழு மனிதநேய கலாச்சாரத்தை தூக்கி எறிந்தும், காரணத்தை மிதித்தும், லூசிபரை (Lucifer) தூண்டியும், ஐரோப்பாவை கைப்பற்றியும், கிட்டத்தட்ட உலகத்தையும் வென்றார்”*

***தானியேல் 8:8-12***, *[8]அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதியும்
வல்லமைகொண்டது; அது பலங்கொண்டிருக்கையில், அந்தப்
பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக
ஆகாயத்தின் நாலுதிசைகளுக்கும் எதிராய் விசேஷித்த
நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது. [9]அவைகளில்
ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு
தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான
தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று. [10]அது
வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்து, அதின் சேனையாகிய
நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணி,
அவைகளை மிதித்தது. [11]அது சேனையினுடைய அதிபதி*

*பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. [12]பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியைசெய்து அநுகூலமடைந்தது.*

*ஒரு ராஜா வந்தார், அவர் செருகஸ் வம்சத்தில் (Seleucus dynasty) எட்டாவது ராஜாவாக எழுந்தார், அவர் கிரேக்க நால்வரில் ஒருவரானார். அவருடைய பெயர் அந்தியோகஸ் எபிபென்ஸ் (Antiochus Epiphanes). அவரே எட்டாம் அதிகாரத்தின் சிறிய கொம்பு, இது ஏழாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறிய கொம்பை கட்டிலும் வேறுபட்டது.*

*அந்தியோகஸ் (Antiochus) தேவாலயங்களை நாசப்படுத்தினார். அவர் இஸ்ரவேலை துன்புறுத்தி தன்னை தானே மேன்மைபாராட்டினார். அவர் அதை ஆறு ஆண்டுகள் மற்றும் 110 நாட்களுக்கு செய்தார்.*

***தானியேல் 8:14**, அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.*

*அந்திகிறிஸ்துவுக்கு 3 ½ ஆண்டுகள் கொடுக்கப்படும் ஆனால் இந்த ஆளுக்கோ 6 ஆண்டுகளுக்கும் மேலாக கொடுக்கப்பட்டது.*

*அந்திகிறிஸ்துவுக்கு சில தலைப்புகள் வழங்கப்பட்டது.*

## சிறிய கொம்பு

**தானியேல்** *7:8, அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு* **சின்ன கொம்பு** *எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தினகொம்புகளில் மூன்றுபிடுங்கப்படது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவகளைப் பேசும் வாயும் இருந்தது.*

*இந்த சிறிய கொம்பு யார் என்று பலர் சிந்திகிறார்கள். வெளி 13இல் உள்ள அதன் தோற்றமும் மிருகத்தின் அனைத்து குணாதிசயங்களையும் ஒன்றாக இருப்பதே அதன் காரணமாகும். இந்த பாத்திரத்தை அடையாளம் காண்பதன் மூலம் மிருகத்தின் குறியை அடையாளம் காணவும், பிறகு இதுவே அந்த குறி என்ன என்பதை அறியவும், இதன் மூலமாய் யார் இந்த அடையாளத்தை மக்களின் மீது செயல்படுத்துகிறார்கள் என்பதை கண்டறியவும் உதவும்.*

1. *பிளவுபட்ட ராஜ்யத்தின் மத்தியில் அது வரும் [வ8]*
2. *இது ஒரு சிறிய இராஜ்யம். சிறிய கொம்பின் மூலம் [வ8]*
3. *அதன் தலையிலிருந்து பேச ஒரு மனிதன் இருப்பான். [வ8]*
4. *இது மற்ற 10 ராஜ்யங்களில் இருந்து "வேறுபட்டது" அல்லது மாறுபட்டது. [வ24]*
5. *இது 10இல் 3 ராஜ்யங்களை "அடிபணிய" செய்யும் [வ8, வ24]*
6. *இது தேவனுக்கு எதிராக பெரிய வார்த்தைகளை பேசும். [வ25]*
7. *இது ரோமில் இருந்து வெளிப்படும் [வ7, 8]*

8. இது 3 ½ ஆண்டுகளுக்கு பரிசுத்தவான்களை துன்புறுத்தும் [வ25]
9. இது காலங்களையும் சட்டங்களையும் மாற்ற "சிந்திக்கும்" [வ25]

| **கிறிஸ்து** | **அந்திகிறிஸ்து** |
|---|---|
| கிறிஸ்து மேலிருந்து வந்தார் (யோவான் 6:38) | அந்திகிறிஸ்து குழியிலிருந்து ஏறி வாருவான் (வெளி 11:7) |
| கிறிஸ்து தன்னுடைய பிதாவின் பெயரிலே வந்தார் (யோவான் 5:43) | அந்திகிறிஸ்து தன்னுடைய சொந்த பெயரிலேயே வருவான் (யோவான் 5:43) |
| கிறிஸ்து தன்னை தாழ்த்தினார் (பிலிப்பியர். 2:8) | அந்திகிறிஸ்து தன்னை உயர்த்துவான் (2 தெசலோனிக்கேயர் 2:4) |
| கிறிஸ்து வெறுக்கப்பட்டார். (ஏசாயா 53:3; லூக்கா 23:18) | அந்திகிறிஸ்து பாராட்டப்படுவான். (வெளி 13:3,4) |
| கிறிஸ்து உயர்த்தப்பட்டார். (பிலிப்பியர். 2:9) | அந்திகிறிஸ்து கீழே நரகத்திற்கு தள்ளப்பட்டான். (ஏசாயா 14:14,15; வெளி 19:20) |

| | |
|---|---|
| கிறிஸ்து தன்னுடைய பிதாவின் விருப்பத்தை செய்தார். *(யோவான் 6:38)* | அந்திகிறிஸ்து தன்னுடைய சொந்த விருப்பத்தை செய்வான். *(தானியேல் 11:36)* |
| கிறிஸ்து இரட்சிக்க வந்தார். *(லூக்கா 19:10)* | அந்திகிறிஸ்து அழிக்க வந்தான். *(தானியேல் 8:24)* |
| கிறிஸ்து ஒரு நல்ல மேய்ப்பர். *(யோவான் 10:4-14)* | அந்திகிறிஸ்து ஒரு அபத்தமான (கெட்ட) மேய்ப்பன். *(சகரியா 11:16,17)* |
| கிறிஸ்துவே "மெய்யான திராட்சச்செடி." *(யோவான் 15:1)* | அந்திகிறிஸ்து "பூமியின் திராட்சச்செடி." *(வெளி 14:18)* |
| கிறிஸ்துவே "சத்தியம்." *(யோவான் 14:6)* | அந்திகிறிஸ்து "பொய்யன்." *(2 தெசலோனிக்கேயர் 2:11)* |
| கிறிஸ்து "தேவனுடைய பரிசுத்தர்." *(மாற்கு 1:24)* | அந்திகிறிஸ்து "அக்கிரமக்காரன்." *(2 தெசலோனிக்கேயர் 2:8)* |
| கிறிஸ்து "தேவனுடைய குமாரன்." *(லூக்கா 1:35)* | அந்திகிறிஸ்து "கேட்டின் மகன்." *2 தெசலோனிக்கேயர் 2:3)* |

## முடிவுரை:

**2 தெசலோனிக்கேயர்** *2:1-4,* [1] அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், [2] ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். [3] எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. [4] அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

'கிறிஸ்துவின் நாளே' இரகசிய வருகையின் ஆதாரம். கிறிஸ்துவின் நாள் என்று சொல்லாத வேதாகமத்தை நீங்கள் பயன்படுத்தினால் உடனடியாக மொழி பெயர்ப்பை மாற்றவும்!

அந்திகிறிஸ்துவை இங்கே 'பாவ மனிதன்' அல்லது 'அக்கிரமகாரன்' என அழைக்கப்படுகிறான்.

*அவன் சட்டங்களை மாற்றுவான் என்பதை தானியேலின் புத்தகத்திலிருந்து நாம் கண்டோம். அவன் தேவனை எதிர்ப்பான். அவனை நரகத்தின் மைந்தன் என்றும் அழைப்பார்கள்.*

*போப்பாண்டவர் அந்திகிறிஸ்துவாக மாறுவது குறித்தும் ஐ.நா. அந்திகிறிஸ்துவாக இருக்கக்கூடும் எனவும் பல ஊகங்கள் உள்ளன. ஆனால் நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவருடைய மகிமையான வருகைக்காக காத்திருங்கள் என்பதே உங்கள் அனைவரிடமும் என்னுடைய மீண்டுமான தாழ்மையான கோரிக்கை, இதுவே ஆசீர்வாதமான நம்பிக்கையாக இருக்கிறது!*

***வெளி** 13:1, பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.*

***வெளி** 17:12, "நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.*

*அந்திகிறிஸ்து மற்றொரு பெயருடன் வருவான். இங்கு அவன் "மிருகம்" என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். தேசத்தாருக்கும் புறஜாதியாருக்கும் கடல் என்கிற ஒரு குறிப்பு உள்ளது (The sea has a reference to Gentiles and to the nations.). அது என்ன கூறுகிறது என்றால், அவன் ஒரு புறஜாதியாக இருக்கக்கூடும்.*

ஆனால் தேவன் முழு வரலாற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார், அவர் என்றென்றும் இருப்பார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.